# நலன்புரி நன்மைகள் சபை

## "அஸ்வெசும" விண்ணப்பங்களை பூர்த்திசெய்வதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள்

**2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் பிரிவு 7(1) இன் படி, "அஸ்வெசும" நலன்புரி அனுகூலங்கள் திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கு தகுதி பெற்ற நபர்களை / குடும்பங்களை அடையாளம் காண்பதற்கு நலன்புரி நன்மைகள் சபை தீர்மானித்துள்ளது. அதன்படி, அனைத்து விண்ணப்பதாரர்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை நன்றாக வாசித்து விண்ணப்பத்தை பூர்த்திசெய்தல் வேண்டும்.**

### (அ) அடிப்படை தகவல்

**01**. நீங்கள் அல்லது உங்களது குடும்ப உறுப்பினர் ஒருவர் முன்னைய அஸ்வெசும – முதலாவது கட்டத்திற்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்து வீட்டு தகவல்களை கணக்கெடுப்புக்குட்படுத்தி QR குறியீடு / HH இலக்கத்தினை பெற்றிருப்பின் **ஆம்** என்ற கூட்டில் √ அடையாளம் இடுங்கள். **ஆம்** என்ற பதிலை தேர்ந்தெடுப்பின், வினா இல. 02 மற்றும் 03 என வினவப்பட்ட வினாக்களுக்கு HH இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை என்பனவற்றைக் குறிப்பிடவும். நீங்கள் QR குறியீடு / HH எண் இல்லாத புதிய விண்ணப்பதாரராக இருந்தால், **இல்லை** என்ற கூட்டில் √ அடையாளம் இடுங்கள்.

**04**. நீங்கள் அல்லது உங்களது குடும்பத்தில் **18** வயதுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களது தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பிறந்த திகதிகள் தெரியுமாயின் மாத்திரம் **ஆம்** என்ற கூட்டில் √ என அடையாளமிடவும். குடும்பத்தில் ஒருவருடைய அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது பிறந்த திகதியினை சமர்ப்பிக்க முடியாதபோது **இல்லை** என்ற கூட்டில் √ அடையாளமிடவும்.

முக்கிய அறிவுறுத்தல்

**அனைத்து விண்ணப்பதாரர்களினதும் 18 வயதுக்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் அனைவரினதும் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பிறந்த திகதியினை கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்படாத அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.**

- தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரர்களுக்கு அடையாள அட்டைகளை விரைவாக வழங்குவதற்காக, ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விசேட வேலைத்திட்டமொன்று பிரதேச செயலக மட்டத்தில் செயற்படுத்தப்படும்.

(ஆ) **விண்ணப்பதாரரின் தகவல்**

**முக்கிய அறிவுறுத்தல்**

"அஸ்வெசும" – இரண்டாவது கட்டத்திற்காக விண்ணப்பிக்க வேண்டியது கீழே குறிப்பிடப்பட்ட நபர்கள் / குடும்பத் தொகுதியினர் மாத்திரமாகும். அதாவது,

- "அஸ்வெசும" - முதலாவது கட்டத்திற்காக விண்ணப்பிக்க முடியாது போன / விண்ணப்பிக்கத் தவறிய நலன்புரி நன்மைகளைப் பெறுவதற்கு தகுதியுடையவர் என எண்ணுகின்ற அனைவருக்கும்
- "அஸ்வெசும" - முதலாவது கட்டத்திற்காக விண்ணப்பித்தும் வீட்டு தகவல்கள் கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்படாத அனைவருக்கும்

- "அஸ்வெசும" – இரண்டாவது கட்டத்திற்காக கீழே குறிப்பிடப்பட்ட நபர்கள் / குடும்பத் தொகுதியினர் விண்ணப்பிக்க முடியாது. அதாவது,
  - <u>ஏற்கனவே நலன்புரி நன்மைக் கொடுப்பனவினைப் பெறுகின்ற அல்லது தகுதிபெற்றோர் பட்டியலில் பெயர்குறிப்பிடப்பட்ட பயன்பெறுநர்களுக்கு</u>
  - <u>தகவல் கணக்கெடுப்புக்குட்பட்டு QR குறியீடு / HH இலக்கத்துடன் தகுதிபெற்றோர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படாத போதிலும் சமூகப் பாதுகாப்பு தகவல் முறைமையில் தகவல் காணப்படுகின்ற நபருக்கு / குடும்பத்திற்குமே</u>

மேற்குறித்த நபர்கள் / குடும்பத் தொகுதியினருக்கு "அஸ்வெசும" – இரண்டாவது கட்டத்திற்காக விண்ணப்பிக்க முடியாததுடன், இவர்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் தமது தகல்களை இற்றைப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

05, 07 பந்திகள் / வினாக்கள் ஆங்கில மொழியில் வினவப்பட்டுள்ளதனால், அவ்விடங்களில் ஆங்கில மொழியிலும் சிங்கள / தமிழ் மொழிகளில் வினவப்பட்ட இடங்களில் தொடர்பாடல் செய்வதற்கு விரும்பிய சிங்களம் அல்லது தமிழ் மொழி ஆகிய இரண்டில் ஒன்றில் பூர்த்திசெய்தல் வேண்டும்.

<u>* அடையாளமிடப்பட்ட அனைத்து வரிகளும் /வினாக்களும் கட்டாயம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.</u>

**16.** பந்தி / வினாவில் விண்ணப்பதாரரின் அல்லது குடும்பத்தின் வேறு வயதுவந்த உறுப்பினரொருவரின் நடமாடும் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடவும். இந்நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தும் போது தேவையான தகவல்களை பரிமாறிக்கொள்வதற்கு நடமாடும் தொலைபேசி இலக்கமொன்று அவசியமாகும்.

**18.** குறித்த குடும்பம் இதற்கு முன்னர் சமுர்த்தி நன்மைகளைப் பெற்றுள்ளதா? என்பது பற்றிய தகவல்களை குறிப்பிடவும். அதற்கான பதிலை **ஆம்** அல்லது **இல்லை** என்ற கூட்டில் √ என அடையாளமிடவும்.

முக்கிய அறிவுறுத்தல்

குடும்ப அலகொன்றுக்கு "அஸ்வெசும" - இரண்டாவது கட்டத்திற்காக சமர்பிக்க முடியுமானது ஒரு விண்ணப்பப்படிவம் மாத்திரமேயாகும். ஒரு விண்ணப்பத்திற்கு கூடுதலாக சமர்ப்பித்தல் மற்றும் குடும்ப உறுப்பினர் ஒருவர் குடும்ப அலகொன்றுக்கு அதிகளவு விண்ணப்பித்திருத்தல் என்பன நலன்புரி நன்மை இல்லாது போவதற்கு அல்லது தாமதமாவதற்கு காரணமாக அமையும். "குடும்ப அலகொன்று" என அடையாளம் காண்பது எதனை? என்பதை நன்றாக அறிந்து கொள்வதற்கு பின்வரும் குடும்பம் தொடர்பான சபையின் பொருள்கோடலினை நன்றாக வாசிக்கவும்.

"குடும்பம் என்பது"

- ஒன்றாக சமைத்து உண்டு குடித்து வாழ்தல்,
- அன்றாட வருமானம் மற்றும் செலவினம் ஒரே அலகாக ஒன்றோடு ஒன்றாக இடம்பெறுதல்,
- விண்ணப்பதாரி, அவரது / அவளது தாய், தந்தை, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், திருமணமாகாத சகோதர, சகோதரிகள் போன்ற ஏனைய தங்கிவாழ்பவர்களை உள்ளடக்கிய அலகொன்று.

## (இ) குடும்ப அங்கத்தவர்கள் பற்றிய தகவல்

குடும்ப உறுப்பினர்களின் முழுப் பெயர், பிறந்த திகதி, ஆண் பெண் நிலை மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து உறுப்பினர்களினதும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிடவும். குடும்ப உறுப்பினர்கள் 06 இற்கு அதிகமாக இருப்பின் பின்னிணைப்பாக சமர்ப்பிக்கவும்.

- **விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்ட தகவல் உண்மையானது என்றும் சரியானது என்றும் விண்ணப்பதாரி கையொப்பமிட்டு சான்றுப்படுத்தல் வேண்டும். நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 14 ஆவது பிரிவிற்கேற்ப பிழையான தகவல்களை வழங்குவது நலன்புரி நன்மைகள் கிடைக்காமற் போவதற்குக் காரணமாகும். அவ்வாறு பிழையான தகவல் வழங்கி ஏதேனும் நன்மை பெறப்பட்டிருப்பின் அரசாங்கத்திற்கு அதனைத் திரும்பப் பெறுவதற்கு நேரிடும் என்பதை கவனத்திற் கொள்ளவேண்டும். அதேபோன்று நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 20 ஆவது பிரிவிற்கேற்ப பொய்யான மற்றும் பிழையான தகவல்களை வழங்கும் விண்ணப்பதாரி நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு விசாரணையில் குற்றவாளியாக காணப்படும் பட்சத்தில் சிறைத் தண்டனைக்கும் தண்டப் பணம் செலுத்துவதற்கும் ஆளாவார்.**

முக்கிய அறிவுறுத்தல்

இந்த விண்ணப்பப் படிவத்தினை நீங்களோ வேறொரு நபரின் தொழில்நுட்ப உதவியினைப் பெற்றோ IWMS கணனி முறைமையில் பதிவேற்றம் செய்தல்வேண்டும். அதன் மூலம் ஏற்படக்கூடிய தாமதங்களைத் தவிர்க்க முடியும். ஏற்கனவே நீங்கள் நிகழ்நிலை மூலம் விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்திருப்பின் இந்த மாதிரி விண்ணப்பப் படிவத்தினை பூர்த்திசெய்து சமர்ப்பிப்பதனை தவிர்க்கவும். நிகழ்நிலை மூலமோ விண்ணப்பத்தின் மூலமோ விண்ணப்பதாரி ஒருவர் சமர்பிக்க வேண்டியது ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே.

இந்த விண்ணப்பப் படிவத்தினை பூர்த்திசெய்து தமக்குரிய கிராம சேவை அலுவலர் பிரிவின் கிராம சேவை அலுவலரிடமோ அல்லது பிரதேச செயலகத்தின் நலன்புரி நன்மைகள் தகவல் பிரிவிடமோ அல்லது பிரதேச செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரிடமோ சமர்ப்பித்தல் வேண்டும். பெற்றுக்கொண்டமையினை உறுதிப்படுத்துகின்ற விண்ணப்பப் படிவத்தின் கீழ் பகுதியினை மீளப் பெற்றுக்கொள்வதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும்.

ஜயந்த விஜேரத்ன
தலைவர் / ஆணையாளர்
நலன்புரி நன்மைகள் சபை